அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 01/2017

எனது இலக்கம் : MPA/IAD/ADM/GA13/SPORTS.2017

அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07
2017.01.25

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
அரசாங்க கூட்டுத்தாபன மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள்

**விளையாட்டு மற்றும் உடல்நல மேம்பாட்டுத் தேசிய வாரம் – 2017 பெப்ரவரி 06 – 12**

சனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்பட்ட 2017 சனவரி மாதம் 06 ஆந் திகதிய சுற்றறிக்கை இல. SP/SB/01/17 ஊடாக அதிமேதகு சனாதிபதி அவர்களின் ஆலோசனையின் பிரகாரம் விளையாட்டுத்துறை அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட **"விளையாட்டு மற்றும் உடல்நல மேம்பாட்டுத் தேசிய வாரம்" 2017** பெப்ரவரி மாதம் 06 ஆந் திகதியில் இருந்து 12 ஆந் திகதி வரை நாடு பூராகவும் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரசாங்க அலுவலர்கள் உடற்பயிற்சியில் ஈடுபடுவதன் மூலம், இலங்கையில் அதிவேகமாக பரவுகின்ற தொற்றா நோய்களை கட்டுப்படுத்துவது தொடர்பாக சிறப்பான ஆரம்பமொன்றை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

02. அதற்மைய 2017 பெப்ரவரி 06 திகதி, **"விளையாட்டுத் துறை மற்றும் உடல்நல மேம்பாட்டு அரச, கூட்டுத்தாபன உத்தியோகத்தர்களின் தினம்"** எனப் பெயரிடப்பட்டுள்ளது. ஆரோக்கியமான அரச அலுவலர்களினூடாக வினைத்திறனும், விளைதிறனும் வாய்ந்த அரசாங்க சேவையொன்றை வழங்குவதை நோக்காக் கொண்டு சகல அரசாங்க நிறுவகங்களிலும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 01/2016 இற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டது போன்று, இம்முறையும் 2017 பெப்ரவரி மாதம் 06 ஆந் திகதி மு.ப. 8.30 கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

**I.** சகல பணியாட் தொகுதியினரதும் முன்னே நிறுவன அல்லது அலுவலக தலைவர் தேசியக் கொடியை ஏற்றுதல்.

**II.** தேசிய கொடியேற்றப்பட்டதன் பின்னர் தேசிய கீதம் இசைத்தல்.

**III.** சுகதேகிகளான அரசாங்க அலுவலர்களினூடாக வினைத்திறனும், விளைதிறனும் வாய்ந்த அரசாங்க சேவையொன்றை வழங்குவது குறித்து உடற்பயிற்சிகள் மற்றும் போசாக்கு என்பவற்றின் முக்கியத்துவம் குறித்து சுருக்கமாக உரையாற்றுதல்.

**IV.** சகல பணியாட்தொகுதியினரும் அலுவலக உடையில் கலந்துகொள்ளக்கூடியவாறு இலகுவான உடற்பயிற்சி திட்டம் ஒன்றை ( 15 நிமிடம்) நடைமுறைப்படுத்தல்

03. சுகதேகிகளான அரசாங்க அலுவலர்களினூடாக வினைத்திறனும், விளைதிறனும் வாய்ந்த அரசாங்க சேவையொன்றை வழங்குவதை இலக்காகக் கொண்ட தகுந்த நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ந்தேச்சையாக முன்னெடுப்பதற்கு முன்னுரிமையளித்து செயற்படுமாறு தயவுடன் அறியத் தருகின்றேன்.

ஜே.ஜே. ரத்னசிறி
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு

பிரதிகள்

1. கௌரவ மாகாண ஆளுநர்கள்
2. சனாதிபதியின் செயலாளர்
3. செயலாளர், விளையாட்டுத்துறை அமைச்சு - தகுந்த உடற்பயிற்சி ஆலோசகர்களை அனைத்து அரசாங்க நிறுவகங்களுக்கும் அனுப்புவதற்காக